# தமிழ் மணக்கும் 'முரசொலி' பொங்கல் மலர்!

**'பொங்கல்' என்றாலே முத்தமிழறிஞரின் மூத்த பிள்ளையான முரசொலிக்குப் புது மகிழ்ச்சி பொங்கும். அதுதான் திராவிட இயக்க இதழ்களின் தனி அடையாளமான பொங்கல் சிறப்பு மலர் எனும் மகிழ்ச்சியாகும். வணிக இதழ்கள் பலவும் வேறுவேறு பண்டிகைகளுக்கு மலர் வெளியிட்ட காலத்தில், திராவிட இயக்கத்தவர் நடத்திய இலட்சிய ஏடுகள் பொங்கல் மலரை வெளியிட்டன. முரசொலி பொங்கல் மலரைத் தங்க ஆபரணம் போல கவனத்துடனும் கலையழகுடனும் உருவாக்குவார் தலைவர் கலைஞர். கலைஞரின் மூத்த பிள்ளையான முரசொலி இன்றளவும் தொடர்ந்து, தமிழர்களின் பண்பாட்டு அடையாளத்தை நிலைநிறுத்தும் பணியைச் சிறப்பாகச் செய்து வருகிறது என்பதற்கு இந்தப் பொங்கல் மலரும் எடுத்துக்காட்டாகும். - முரசொலியின் தை முதல் நாள் தமிழ்ப்புத்தாண்டு-பொங்கல் சிறப்பு மலர் 2025இல் இடம்பெற்றுள்ள தமிழ்நாடு முதலமைச்சர்-கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கட்டுரையில் உள்ள வரிகள் இவை.**

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோர் தமிழர் திருநாளாம் பொங்கல் நன்னாள் குறித்து பண்பாட்டுக் கண்ணோட்டத்தில் வெளிப்படுத்திய சொல்லோவியங்களுடன் தொடங்கும் முரசொலி பொங்கல் மலரில் கழகத் தலைவரின் கட்டுரை தொடங்கி கழக முன்னோடிகள், திராவிட இயக்கப் படைப்பாளிகள் ஆகியோரின் கட்டுரைகளும், கவிதைகளும் மணம் சேர்க்கின்றன.

**உயிர்ப்பான ஓவியம் -சிறப்பான கட்டுரை**

அட்டைப் படமாக, உழைப்பினைப் போற்றி, உழவர்களுக்கும் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் கால் நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் திருநாளான பொங்கலின் பண்பாட்டு அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் சிறப்பான ஓவியம் இடம்பெற்றுள்ளது. கட்டுரைகளுக்கும் கவிதைகளுக்கும் தேர்வு செய்யப்பட்டுள்ள படங்களும்- ஓவியங்களும் கண்களைக் கவர்ந்து கருத்தில் நிறையக் கூடியனவாக இருக்கின்றன. சிறப்பு மலர்களின் தனித்த அடையாளமாக இருப்பவை விளம்பரங்கள். கழகத்தினர் தந்துள்ள விளம்பரங்கள் அனைத்தும் பொங்கல் நாளான தை முதல் நாளே தமிழ்ப்புத்தாண்டு என்பதை நிலைநிறுத்தும் வகையிலும், இந்தியாவுக்கே முன்னோடியாக விளங்கும் திராவிட மாடல் அரசின் மக்கள் நலத் திட்டங்களை மனதில் பதிய வைக்கும் வகையிலும் நேர்த்தியாக வடிவமைக்கப் பட்டிருப்பது கூடுதல் சிறப்பு.

கழகப்பொதுச்செயலாளர்துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர்கள் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி ஆகியோரின் கட்டுரைகளில் பொங்கல் ஏன் தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாகத் திகழ்கிறது என்பதை விளக்கும் அழுத்தமான கருத்துகள் இடம்பெற்றுள்ளன. தமிழ் இலக்கியங்களில் தை முதல் நாளின் சிறப்பு கையாளப் பட்டிருக்கும் விதத்தை முனைவர் க.பொன்முடியின் கட்டுரை விளக்குகின்ற நிலையில், உழவர் களின் சிறப்பைப் போற்றும் வகையில் வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும் திராவிட மாடல் அரசின் செயலாக்கத்தை ஐ.பெரியசாமியின் கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.

கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ. இராசா அவர்களின் கட்டுரையில் மிக முக்கியமான வரலாற்றுக் குறிப்பு இடம்பெற்றுள்ளது. "இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் ஒரு பகுதியாக 1937ஆம் ஆண்டு திருச்சியில் தந்தை பெரியார் அவர்கள் நடத்திய தமிழர் மாநாடு பசுமலை சோமசுந்தர பாரதியார் தலைமையில் நடைபெற்றதையும், அதில் பேராசிரியர் கா.சு.பிள்ளை, தமிழவேள் பி.டி.ராசன், திரு.வி.க., மறைமலையடிகள் ஆகியோர் கலந்து கொண்டதையும், அந்த மாநாட்டில்தான் 'பொங்கல் மதச்சார்பற்ற பொன்னான விழா என்பதை ஏற்றுக்கொள்கிறேன்' என்று பெரியார் அறிவித்தார் என்பதையும், அதற்குப் பிறகுதான் பொங்கல் பெருவிழாவாக உருவெடுத்தது என்பதையும், அந்த நிகழ்வில் கலந்துகொண்ட மலேயாவின் பெரும்புலவர் கா.ப.சாமி அவர்களின் பதிவை சான்றுடன் சுட்டிக்காட்டி, பொங்கல் விழாவின் சிறப்பை 'தமிழ் தேசியத் திருநாள்'எனும் தன் நூலில் பதிவு செய்துள்ளார் திருக்குறள் மணி புலவர் இறைக் குருவனார்" என்று ஆ.இராசா எம்.பி. குறிப்பிடுகிறார்.


**திராவிடத்திற்குத் துணை நிற்கும் தோழமை**

தாய்க் கழகமான திராவிடர் கழகத்தின் தலைவர், ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் 'திராவிடப் பண்பாட்டுப் பொங்கல்' கட்டுரையில், ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்பிலிருந்து திராவிடர்களாம் தமிழர்களை மீட்டெடுக்க தந்தை பெரியாரால் தொடங்கப் பட்ட சுயமரியாதை இயக்கத்திற்கு இந்த ஆண்டு நூற்றாண்டு விழா, அந்த சுயமரியாதை இயக்கக் கருத்துகளைப் பரப்பிட அவர் தொடங்கிய குடிஅரசு இதழுக்கு நூற்றாண்டு, வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நிறைவு, சிந்து சமவெளி நாகரிகம் திராவிட நாகரிகமே என தொல்லியல் அறிஞர் ஜான் மார்ஷல் நிறுவியதன் நூற்றாண்டு, சேரன்மாதேவி குருகுலப் போராட்ட நூற்றாண்டு, பொதுவுடைமை இயக்கம் இந்தியாவில் தோன்றியதன் நூற்றாண்டு எனத் திராவிட இயக்கத்தின் நெடும் பயணத்தை நினைவூட்டி, இன்று நாம் வந்து சேர்ந்துள்ள இடத்தையும், அது தொடர வேண்டிய திசையையும் சுட்டிக்காட்டி யுள்ளார்.

தோழமைக் கட்சித் தலைவர்களான கு.செல்வப்பெருந்தகை, கே.பாலகிருஷ்ணன், இரா.முத்தரசன், பேராசிரியர் காதர் மொய்தீன், பேராசிரியர் ஜவாஹிருல்லா, பொன்.குமார் ஆகியோரின் கட்டுரைகளில் தமிழர் பண்பாட்டைக் காக்கும் திராவிட இயக்கத்தின் முயற்சிகளையும், மதச்சார்பற்றக் கொள்கையுடன் ஜனநாயகம் காத்திட தோழமைக் கட்சிகள் இணைந்து நிற்பதையும் குறிப்பிட்டுள்ளனர்.

**சொல்லும் செயலும் ஒரே நேர்க்கோட்டில்**

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அவர்களின் கட்டுரையில், தமிழ்ப் பண்பாட்டைக்காக்கும்போராளியாகமுத்தமிழறிஞர் கலைஞர் முன்னெடுத்த வெற்றிகரமான முயற்சிகளையும் அவர் நிலைநிறுத்தியுள்ள பண்பாட்டு அடையாளங்களையும் சுட்டிக்காட்டுகிறார்.




கழகத்தின் இளைஞரணிச் செயலாளர்; துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முரசொலி பொங்கல் மலர் கட்டுரை தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்களை மீட்பதுடன், தமிழ்ப் பண்பாட்டை நிலைநிறுத்த பாடுபட்ட சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் உள்ளிட்டோருக்கு திராவிட மாடல் அரசு சிறப்பு சேர்த்திருப்பதுடன், வரலாற்றை வாசிப்பதன் வாயிலாக எதிர்காலம் குறித்த தொலைநோக்கு சிந்தனையை இளைய தலை முறையிடம் கிளர்ந்தெழச் செய்யும் வகையில் சென்னையில் அண்ணா நூற்றாண்டு நூலகமும், மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகமும் அமைக்கப்பட்டு, கோவையில் பெரியார் நூலகத்தை அமைக்கின்ற திராவிட மாடல் அரசின் அறிவுசார் திட்டங்களையும் தன் கட்டுரையில் விளக்கியிருக்கிறார். எழுத்தில் மட்டுமின்றி, செயலிலும் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் கழகத் தலைவரின் ஆணையை ஏற்று, கலைஞர் நூற்றாண்டு செயல்பாடாக இளைஞரணி சார்பில் நூலகத்தை அமைத்து வருகிறார் துணை முதலமைச்சர். முரசொலியின் பாசறைப் பக்கத்தில் வெளியாகும் கட்டுரைகளை நூல் தொகுப்பாக முத்தமிழறிஞர் பதிப்பகம் வாயிலாக வெளியிட்டு, இளையதலைமுறையினரிடம் அறிவுப் புரட்சியை அவர் உருவாக்கி வருகிறார்.



**கோவி.லெனின்**
கழகத் தகவல் தொழில்நுட்ப அணி, ஆலோசகர்

**திராவிட இயக்கத்தின் வரலாற்றுச் சாதனைகளையும், திராவிட இயக்கத் தலைவர்களின் அயராத உழைப்பையும் கொச்சைப்படுத்தும் கூலி அரசியல் பிழைப்பாளர்களுக்கு இயக்கத்தின் இளந்தலைமுறையினர் ஆதாரங்களுடன் பதிலடி கொடுத்து வரும் நிலையில், காலந்தோறும் எழுந்தடங்கும் இத்தகைய அவதூறாளர்களைக்கருத்தாயுதத்தால் விரட்டும் அடுத்தடுத்த தலைமுறை திராவிட வீரர்களுக்கானப் பயிற்சிக்களமாக பாசறைப் பக்கமும் முத்தமிழறிஞர் பதிப்பகமும் செயல்படுவது, கலைஞரின் மூத்த பிள்ளையான முரசொலியின் 80 ஆண்டுகால உழைப்பின் விளைச்சலாகும்.**

**திருக்குறளைப் போற்றும் திராவிடம்**

இந்தியாவின் தெற்கு எல்லையும், தமிழ்நாட்டின் தென்முனையுமான முக்கடல் சங்கமிக்கும் குமரியில் 133 அடி உயர அய்யன் திருவள்ளுவர் சிலையை முத்தமிழறிஞர் கலைஞர் நிறுவியதன் வெள்ளிவிழா ஆண்டில் திருக்குறளைப் போற்றிய திராவிட இயக்கத்தின் சிறப்புகளை எடுத்துரைக்கும் வகையில் முனைவர் ம.இராசேந்திரன், இதழாளர் ப.திருமாவேலன், கம்பம் செல்வேந்திரன், கவிஞர் தமிழ்தாசன் ஆகியோர் தீட்டியுள்ள கட்டுரைகள் தமிழ் மணத்துடன், அதில் குறள் மணத்தையும் இணைத்து மலரெங்கும் மணம் கமழச் செய்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்-கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன் தனது வழக்கமான ஆய்வுப் பார்வையிலான கட்டுரையில், சங்கத் தமிழில் தைத் திங்களின் சிறப்பைக் கூறும் பாடல்களை சுட்டிக்காட்டி, மேலை நாடுகளில், 'தேங்க்ஸ் கிவிங்' என்ற நன்றியுணர்வைக் காட்டும் விழாக்களைப் போல, அதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் இயற்கைக்கும் உயிரினங்களுக்கும் நன்றி செலுத்தும் விழாவாகப் பொங்கல் விழாவை சிறப்பாகக் கொண்டாடியிருப்பதை எடுத்துரைத்திருக்கிறார். தமிழுக்கான அரசாக திராவிட மாடல் அரசு திகழ்வதை விளக்கும் கவிஞர் மனுஷ்யபுத்திரன் கட்டுரை, இளைய தலைமுறையின் அறிவாற்றலையும் புத்தக வாசிப்பையும் மேம்படுத்தும் வகையில் மாவட்டங்கள்தோறும் புத்தகக் காட்சிகளை நடத்துவதுடன், பன்னாட்டு புத்தகக் காட்சியையும் தொடர்ந்து நடத்தி, படிப்பார்வத்திலும் பதிப்புத் துறையிலும் இந்த அரசு மேற்கொண்டுள்ள மவுனப் புரட்சியை விளக்கியுள்ளார். இலக்கிய அணியின் கலைராஜன், வழக்கறிஞர் வெ.அன்புவாணன் ஆகியோரின் கட்டுரைகளில் திராவிட இன உணர்வு பொங்குகிறது.

**கவிதைச் சோலையும் கருத்து முத்துகளும்**

முரசொலி மலர் என்றால் அதில் கவிதைகளுக்கென அழகான சோலை ஒன்று எப்போதும் இருக்கும். இந்தப் பொங்கல் மலரிலும் கவிப்பேரரசு வைரமுத்து, கவிப்பேருவி ஈரோடு தமிழன்பன், கவிச்சுடர் கவிதைப்பித்தன், பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன், பேராசிரியர் சுப.வீரபாண்டியன், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், பேராசிரியர் மா.செல்வராசன் ஆகியோரின் கவிதைகளில் சல்லிக்கட்டு காளைகள் போல திராவிடக் கொள்கையுணர்வு திமிறுகிறது.

இளந்தலைமுறை படைப்பாளிகள் பலருக்குப் பாடி வீடாக இருந்தது கலைஞரின் முரசொலி. சாகித்ய அகாடமி விருது பெற்ற படைப்பாளியான மாதவன், தனக்கு விருது அறிவிக்கப்பட்டபோது இந்து தமிழ் நாளிதழுக்கு அளித்த நேர்காணலில், தன்னுடைய தொடக்கக் கால எழுத்துகளை வெளியிட்டு ஊக்கப்படுத்தியது முரசொலி என்று பதிவு செய்திருக்கிறார். தமிழின் பெரும் படைப்பாளிகள் பலர் முரசொலியின் வார்ப்புகள். அந்த மரபின் தொடர்ச்சியாக எழுத்தாளர் டான் அசோக், கட்டுரையாளர் சௌமியன் வைத்தியநாதன் ஆகியோரின் பொங்கல் கட்டுரைகள் இன்றைய தலைமுறையினரின் எண்ண ஓட்டங்களை மிகச் சரியாக வெளிப்படுத்துவதுடன், சமூக வலைதள யுகத்தில் திராவிட இயக்கம் தன்னுடைய கொள்கை சார்ந்த கருத்துகளில் முன்வைக்க வேண்டிய முறைகளையும், அதற்குரிய தேவைகளையும் குறிப்பிட்டுக் காட்டுவதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது தேர்தல் அரசியலில் பங்கேற்கும் இயக்கம் என்றாலும், அதன் அடித்தளம் என்பது சமூக நீதி வழியிலான சமுதாய விடுதலையும், அதன் மேல்கட்டுமானமான பொருளாதார சமத்துவமும்தான். சாதிப்படி நிலையையும், பாலின வேறுபாட்டையும், மொழி ஆதிக்கத்தையும், மதவெறியையும் எதிர்த்து நின்று மானுடத்திற்கானத் தத்துவத்தை முன்னிறுத்தும் இயக்கமே தி.மு. கழகம். அதன் தத்துவ வேர்கள் ஆழமானவை. ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இந்த மண்ணில் வேரூன்றியவை. பண்பாட்டுப் படையெடுப்பில் முளைத்தவற்றை எதிர்த்து நடைபெறும் தத்துவப் போராட்டத்தின் நீட்சி. அதை விளக்குகின்ற வகையில், திராவிட இயக்க ஆய்வாளர் ஐயா க.திருநாவுக்கரசு எழுதியுள்ள அம்பபாலி என்ற படைப்பு, 2025 முரசொலி பொங்கல் மலரின் முத்தாய்ப்பாகும். புத்தர் கால நிகழ்வினை அடிப்படையாக வைத்து படைக்கப் பட்டுள்ள அவருடைய எழுத்தோவியம், திராவிட இயக்க எழுத்தாளர்களின் நுண்மான் நுழைபுலத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு.

**அன்று போல இன்றும்**

பொங்கல் போன்ற திருநாள்களில் ஒரு முழம் மல்லிகைப் பூ 100 ரூபாய்க்கு விற்கின்ற சூழலில், சரம் சரமாகத் தொடுக்கப்பட்டிருக்கும் தமிழ் மணம் வீசும் வண்ணமயமான முரசொலி பொங்கல் மலர் 150 ரூபாய் விலையில் கிடைக்கிறது.

இந்த மலரை மிகச்சிறப்பாக வடிவமைத்துள்ள 'முரசொலி' ஆசிரியர் குழுவினருக்கு பாராட்டுக்கள்!

"ஒவ்வொரு ஆண்டும், தமிழ் மணமும் எழிலும் துலங்கிட வெளிவருவது முரசொலி பொங்கல் மலர். தம்பிகள் கருணாநிதியும், மாறனும் கழகத் தொண்டாற்றுகின்றவர்கள் மட்டும் அல்ல. அந்தத் தொண்டிலே கலை மணத்தை இழைத்துக் குழைத்துத் தருகின்றனர்" என்று குறிப்பிட்டவர் பேரறிஞர் அண்ணா. அவர் மேலும், "நித்தநித்தம் போர்ப்பரணி பாடிடும் முரசொலி, பொங்கற் திருநாளன்று புதியதோர் எழிலையும் புன்னகையையும் கொண்டு தமிழரின் உள்ளத்துக்குச் சுவையும், பயனும் மிகுந்திடு கருத்தோவியங்களையும், கண்களைக் கவர்ந்திடும் வனப்போவியங்களையும் இணைத்துத் தருகிறது. தமிழரின் இல்லங்களில் இவ்விதழ்ப் பூங்காற்றால் புது இன்பம் கண்டிடும் நிலையினராக மக்கள் இருந்திடச் செய்து விடுகிறது" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

**அண்ணா இன்றில்லை. அவர் பாராட்டிய கலைஞரும் முரசொலி மாறனும் இல்லை. அவர்களிருவரின் அடியொற்றி முரசொலித்த செல்வம் அவர்களும் இப்போது இல்லை. ஆனால், அண்ணா பாராட்டிய முறையில், கலைஞரும், முரசொலி மாறனும், முரசொலி செல்வமும் வளர்த்தெடுத்த வழியில், முரசொலியின் "தமிழ்ப்புத்தாண்டு -பொங்கல் மலர் 2025" தமிழர்களின் பண்பாட்டு அடையாளத்தின் அச்சு வடிவமாக எத்திசையும் தமிழ் மணம் கமழச் செய்யும் பணியைத் தொடர்கிறது.**





மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில் நடைபெற்ற விறுவிறுப்பான ஜல்லிக்கட்டு போட்டியில் சிறப்பாக விளையாடிய சிறந்த காளைக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பாக டிராக்டரையும், சிறந்த மாடுபிடி வீரருக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சார்பாக சொகுசு காரையும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் சங்கீதா முன்னிலையில் வழங்கினர். உடன் மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், ஆணையாளர் தினேஷ்குமார் மற்றும் அதிகாரிகள், விழா குழுவினர், கழகத்தினர் உள்ளனர்.

### தமிழ்நாட்டில் இடைநிற்றல் இல்லாமல் நடுநிலைப்பள்ளியில் 100% இருப்பதுபோல

# உயர்நிலைக் கல்வியிலும் 100% இலக்கினை எட்ட வேண்டும்!

**"தினத்தந்தி" நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!**

சென்னை, ஜன. 19-

தமிழ்நாட்டில் இடைநிற்றல் இல்லாமல் நடுநிலைப் பள்ளியில் 100% இருப்பது போல உயர்நிலைக் கல்வியிலும் 100% இலக்கினை எட்ட வேண்டுமென்பதே பள்ளிக் கல்வி துறையின் எண்ணமென ''தினத்தந்தி'' நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அது வருமாறு:-

"கல்வி சிறந்த தமிழ்நாடு" என்று மகாகவி பாரதியார் அன்றே பாடியிருக்கிறார். தமிழர்கள் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்தார்கள் என்பது சங்ககால இலக்கியங்களில் இருந்தே தெரிகிறது. சுதந்திரம் அடைந்த பிறகு பெருந்தலைவர் காமராஜர் அனைவரும் பள்ளிக்கூடத்துக்கு செல்ல வேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்டிருந்தார். "பள்ளிக்கூடமே இல்லாத ஊரே இருக்கக்கூடாது, வீட்டில் பள்ளிக்கூடத்துக்கு செல்லாத குழந்தைகளே இருக்கக் கூடாது' என்பதையே லட்சியமாக கொண்டிருந்தார்.

அந்த வழியில், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினும் பல திட்டங்களை தொடர்ந்து கல்வி வளர்ச்சிக்காக நிறைவேற்றி வருகிறார். பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியும், பள்ளிக்கூடத்துக்கு செல்வது என்பது மாணவர்களுக்கு கசப்பாக இல்லாமல் கற்கண்டு சாப்பிடுவது போல இனிப்பாக இருக்கவேண்டும் என்ற வகையில், பள்ளிக்கூடங்களில் கற்பித்தலும், கற்றுக்கொள்ளுதலும் இருக்க வேண்டும் என்பதற்கேற்ப கல்வித்திட்டங்களை வகுத்து வருகிறார்.


தலையங்கம்
தினத்தந்தி
18.1.2025 (சனிக்கிழமை)
தமிழகத்தில் இடைநிற்றல் இல்லாத கல்வி!

பொதுவாக, தங்கள் குழந்தைகள் அனைவரையும் ஆரம்ப பள்ளிகளில் பெற்றோர் சேர்த்து விடுகிறார்கள். ஆனால், சில வகுப்புகளுக்கு முன்னேறி சென்ற பிறகு, குடும்ப வறுமை, படிப்பில் நாட்டம் இல்லாமை போன்ற காரணத்தால் மாணவர்கள் பள்ளிக்கூடத்துக்கு செல்லாமல் படிப்பை நிறுத்தி விடுகிறார்கள். இதை தடுப்பதற்காக, யாராவது மாணவர்கள் பள்ளிக்கூடத்துக்கு வரவில்லையென்றால், அந்த வகுப்பு ஆசிரியர் அவர்கள் வீட்டுக்கே சென்று, ஏன் பள்ளிக்கூடத்துக்கு வரவில்லை? என்பதை அறிந்து, அதற்கு தீர்வும் கண்டு, மீண்டும் பள்ளிக்கூடத்திற்கு வர வைக்க வேண்டும் என்று கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது. இந்த முயற்சிக்கு இப்போது கைமேல் பலன் கிடைத்துள்ளது.

மாணவர்கள் இப்போதெல்லாம் இடைநிற்றல் இல்லாமல் படித்து பெரும் சாதனையை படைத்துள்ளனர். மத்திய அரசாங்கத்தின் ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் முறைமை நாடு முழுவதும் இடைநிற்றல் இல்லாமல் மாணவர்கள் படிப்பது குறித்து ஒரு ஆய்வை நடத்தியுள்ளது. இதில், தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது. 8-வது வகுப்பு வரை இடைநிற்றல் இல்லாமல் படிக்கும் மாணவர்கள் கணக்கில் 2019-ல் 100-க்கு 99 மாணவர்களும், 97.5 மாணவிகளும் இடம் பெற்றிருந்தார்கள். ஆனால், இப்போது 2024-ல் 100-க்கு 100 மாணவ - மாணவிகள் இடைநிற்றல் இல்லாமல் 8-வது வகுப்பு வரை தங்கள் கல்வியை தொடர்ந்து இருக்கிறார்கள்.

இந்த பட்டியலில் தேசிய அளவில் தமிழ்நாடு, மாணவர்கள் வரிசையில் 4-வது இடத்திலும், மாணவிகள் வரிசையில் 7-வது இடத்திலும் இருந்தது. ஆனால், 2024-ல் மாணவர்கள், மாணவிகள் இருபாலர்களிலும் தமிழ்நாடு முதல் இடம் பெற்று நாட்டிலேயே முதன்மை மாநிலமாக திகழ்ந்து முத்திரை பதித்துள்ளது. உயர்நிலை கல்வியிலும் தமிழ்நாடு 2019-ல் மாணவர்கள் 81.3 சதவீதமும், மாணவிகள் 89.4 சதவீதமும் தங்கள் படிப்பை தொடர்ந்து இருந்தார்கள். ஆனால், 2024-ல் மாணவர்கள் 89.2 சதவிதமும், மாணவிகள் 95.6 சதவீதமும் தங்கள் படிப்பை உயர்நிலை பள்ளிக்கூடங்களில் தொடர்ந்து நல்ல முன்னேற்றத்தை அடைந்திருக்கிறார்கள். இதிலும் அகில இந்திய தரவரிசையில் மாணவர்கள் 2019-ல் 8-வது இடத்திலும் மாணவிகள் 4-வது இடத்திலும் இருந்தனர். இப்போது மாணவர்கள் 4-வது இடத்துக்கும், மாணவிகள் 2-வது இடத்துக்கும் வந்து விட்டனர். இதில் மாணவிகளின் முன்னேற்றம் அளப்பரியதாக உள்ளது. நடுநிலைப்பள்ளியில் இடைநிற்றல் இல்லாமல்100 சதவீதம் இருப்பதுபோல, உயர்நிலை கல்வியிலும் 100 சதவித இலக்கினை எட்ட வேண்டும் என்பதே பள்ளிக் கல்வித்துறையின் எண்ணமாக இருக்கிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.